**சார்பு நீதிமன்றம், நாகப்பட்டினம்.**

முன்னிலை - திருமதி. S. இந்திராகாந்தி, எம்.எல்.,

சார்பு நீதிபதி, நாகப்பட்டினம்.

திருவள்ளுவராண்டு 2057 பராபவ வருடம் ஆனித்திங்கள் 17-ம் நாள்

2026 ம் ஆண்டு ஜூலை மாதம் 01-ம் நாள் புதன்கிழமை

CNR:NO: TNNG03-000376-2025

**இந்து திருமண அசல் மனு எண்.94/2025**

நித்தியகலா .......................மனுதாரர்

....எதிர்....

ராஜாராமன் ..................எதிர்மனுதாரர்

இம்மனுவானது இந்நீதிமன்றத்தின் முன்பாக 17.06.2026 அன்று விசாரணைக்கு வந்து, மனுதாரர் தரப்பில் வழக்கறிஞர் திரு. B. ஜெயக்குமார் அவர்கள் ஆஜராகியும், எதிர்மனுதாரர் தரப்பில் வழக்கறிஞர் திரு.M.மகேஷ் அவர்கள் ஆஜராகி, எதிருரை தாக்கல் செய்ய நீதிமன்றம் ஆஜராகாததால் தோன்றாத் தரப்பினராக தீர்மானிக்கப்பட்டும், மனுதாரர் தரப்பு வாதங்களை கேட்டும், வழக்காவணங்களை பரிசீலனை செய்தும் இன்று இந்நீதிமன்றம் வழங்கும்..........

## ஆணையுரை

மனுதாரருக்கும், எதிர்மனுதாரருக்கும் கடந்த 11.02.2008 ல் திருவாரூர் மாவட்டம், மன்னார்குடி, வடவூர் சாத்தனூர் காளியம்மன் கோவிலில் நடைபெற்ற திருமணத்தை ரத்து செய்து விவாகரத்து பரிகாரம் வழங்கி தீர்ப்பும், தீர்ப்பாணையும் வழங்க கோரியும், இதர உகந்த பரிகாரங்கள் வழங்க கோரியும், இந்து திருமண சட்டம் பிரிவு 13(1) (i-a)-ன் கீழ் இம்மனு மனுதாரரால் தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

S INDRA GANDHI Digitally signed by S INDRA GANDHI
Date: 2026.07.01 17:00:10 +0530

## II. மனுதாரர் தாக்கல் செய்துள்ள மனுவின் சுருக்கம்

மனுதாரருக்கும், எதிர்மனுதாரருக்கும் கடந்த 11.02.2008 அன்று பெரியோர்களால் நிச்சயிக்கப்பட்டு, திருவாரூர் மாவட்டம், மன்னார்குடி, வடவூர் சாத்தனூர் காளியம்மன் கோவிலில் இந்து சாஸ்திர முறைப்படி திருமணம் நடைபெற்றது என்றும், திருமணத்தின்போது மனுதாரருக்கு 8 பவுன் தங்க நகையும், சீர்வரிசை சாமான்கள் வாங்கி கொடுக்கப்பட்டது என்றும், திருமணத்திற்கு பின்னிட்டு மனுதாரரும், எதிர்மனுதாரரும் எதிர்மனுதாரர் இல்லத்தில் சந்தோசமாக கணவன் மனைவியாக குடும்பம் நடத்த ஆரம்பித்தனர் என்றும், திருமணத்தின் பலனாக 16.03.2009 அன்று ஆண் குழந்தை பிறந்து தற்போது வேதாரண்யத்தில் 12ம் வகுப்பு படித்து வருகிறார் என்றும், திருமணத்திற்கு பிறகு 2011 – 2013 ல் சாத்தனூர் ஆரம்ப பள்ளியிலும், 2013 - 2015 ல் மன்னார்குடி தரணி மெட்ரிக்குலேசன் பள்ளியிலும், 2015 – 2020 ஆண்டில் நாகப்பட்டினம் மாவட்டம், வேதாரண்யம் தாலுக்கா, கரியாபட்டினம் கிராமத்தில் உள்ள மெட்ரிக்குலேசன் பள்ளியிலும் ஆசிரியையாக பணிபுரிந்து வந்தார் என்றும், எதிர்மனுதாரர் தனியார் நிறுவனத்தில் பணிபுரிந்து மாதம் ரூ.50,000/- வருமானம் ஈட்டி வந்தார் என்றும், மனுதாரருக்கும், குழந்தைக்கும் எதிர்மனுதாரர் எவ்வித பராமரிப்பு செலவுகளும் செய்யவில்லை என்றும், எதிர்மனுதாரர் வீடு கட்ட ஆரம்பித்தார் என்றும், ஆனால் எவ்வித செலவுகளும் எதிர்மனுதாரர் செய்யவில்லை என்றும், மனுதாரர் 6 கடன்கள் மூலம் ரூ.3,60,000/- கடன் பெற்றும், மீண்டும் ரூ.70,000/- கடன் பெற்றும் மேற்படி கடன் தொகைகளை மனுதாரர் எதிர்மனுதாரரிடம் கொடுத்துள்ளார் என்றும், எதிர்மனுதாரர் மனுதாரர் பற்றியும் குழந்தை பற்றியும் கவலை படாமல் மதுவிற்கு அடிமையாகி தினமும் மது அருந்தி மனுதாரரின் நடத்தையில் சந்தேகப்பட்டும், குடும்பத்தினர்கள் முன்னிலையில் மனுதாரரை அடித்து உதைப்பதும், தகாத வார்த்தைகளால் பேசுவதும் வாடிக்கையாக கொண்டிருந்தார் என்றும், கடந்த

S INDRA GANDHI Digitally signed by S INDRA GANDHI
Date: 2026.07.01 17:00:16 +0530

18.05.2025 அன்று இரவு, எதிர்மனுதாரர் மது அருந்திவிட்டு வீட்டிற்கு வந்து, மனுதாரருடன் தேவையில்லாமல் சண்டையிட்டு, மனுதாரரை தாக்கிவிட்டு வீட்டை விட்டு சென்றுவிட்டார் என்றும், மேலும், மனுதாரர் வீட்டில் இல்லை என்று எதிர்மனுதாரரே கலியம்பட்டு காவல் நிலையத்தில் மனுதாரருக்கு எதிராக ஒரு பொய்ப் புகார் கொடுத்து, விசாரணைக்கு இருவரும் ஆஜராகியபோது காவல் துறையினர் எதிர்மனுதாரருக்கு அறிவுரைகள் கூறி அனுப்பி வைத்துள்ளனர் என்றும், எதிர்மனுதாரருடன் மனுதாரர் சேர்ந்து வாழ எடுத்த முயற்சிகள் அனைத்தும் பலனளிக்கவில்லை என்றும், இனியும் எதிர்மனுதாரருடன் மனுதாரர் எதிர்மனுதாரருடன் நடந்த திருமண பந்தம் நீடிப்பதில் அர்த்தம் இல்லை என்றும், எனவே, மனுதாரருக்கும், எதிர்மனுதாரருக்கும் இடையே ஏற்பட்ட திருமணத்தை ரத்து செய்து விவாகரத்து பெற்றுக் கொள்ள மனுதாரர் இந்த விவாகரத்து மனுவை தாக்கல் செய்துள்ளார் என்றும் குறிப்பிட்டு மனுதாரர் இம்மனுவை தாக்கல் செய்துள்ளார்.

III. மனுதாரரின் மனுவின் அடிப்படையில் எதிர்மனுதாரருக்கு உரிய முறையில் நீதிமன்றம் மூலமாகவும், தபால் மூலமாகவும் அழைப்பாணை அனுப்பி பெற்றுக்கொண்ட எதிர்மனுதாரர் வழக்கறிஞர் மூலம் நீதிமன்றம் ஆஜராகியிருந்தபோதிலும் எதிருரை தாக்கல் செய்ய எதிர்மனுதாரர் நீதிமன்றம் ஆஜராகாததால் கடந்த 26.03.2026 அன்று எதிர்மனுதாரரை தோன்றா தரப்பினராக தீர்மானித்து உத்தரவிடப்பட்டுள்ளது.

## IV. இந்த வழக்கில் தீர்மானிக்கப்பட வேண்டிய பிரச்சனை

மனுவில் கோரியுள்ள பரிகாரம் மனுதாரருக்கு கிடைக்கத்தக்கதா என்பதேயாகும்?

V. மனுதாரர் தரப்பில் ம.சா.1 சாட்சி விசாரிக்கப்பட்டு, மனுதாரர் தரப்பில்

மனுதாரர் தரப்பில் மனுதாரர் ம.சா.1 ஆக விசாரிக்கப்பட்டு, மனுதாரர் தரப்பில் ம.சா.ஆ.1 முதல் ம.சா.ஆ.5 ஆவணங்கள் குறியீடு செய்யப்பட்டுள்ளது.

## VI. பிரச்சனைக்கான தீர்வு

**1)** மனுதாரர் தாக்கல் செய்துள்ள மனுவை நிரூபிக்கும் விதமாக மனுதாரர் ம.சா.1 ஆக விசாரிக்கப்பட்டுள்ளார். ம.சா.1 மனுவில் கூறியுள்ள சங்கதிகளை அனுசரித்து முதன்மை விசாரணை வாக்குமூலம் அளித்துள்ளார். மனுதாரர் தனது கட்சிக்கு ஆதரவாக 11.02.2008 தேதியிட்ட மனுதாரருக்கும், எதிர்மனுதாரருக்கும் நடந்த திருமணத்திற்கான திருமண அழைப்பிதழ் ம.சா.ஆ.1 ஆவணமாகவும், திருமணத்தின்போது எடுக்கப்பட்ட புகைப்படம் ம.சா.ஆ.2 ஆவணமாகவும், மனுதாரரின் ஆதார் அட்டை நகல் ம.சா.ஆ.3 ஆவணமாகவும், எதிர்மனுதாரரின் ஆதார் அட்டை ம.சா.ஆ.4 ஆவணமாகவும், குடும்ப அட்டை ம.சா.ஆ.5 ஆவணமாகவும் குறியீடு செய்யப்பட்டுள்ளது.

**2)** மனுதாரர் தனது மனுவில் குறிப்பிட்டுள்ளவாறு எதிர்மனுதாரர் தினமும் மது அருந்திவிட்டு மனுதாரரின் நடத்தை சந்தேகப்பட்டு, தகாத வார்த்தைகளால் பேசி, அடித்து துன்புறுத்தி வந்துள்ளார் என்றும், மனுதாரருக்கும், அவரது குழந்தைக்கும் எவ்வித பராமரிப்பு செலவுகள் செய்யாமல் இருந்து வந்துள்ளார் என்றும், எதிர்மனுதாரரின் செய்கையால் மனுதாரர் தனியாக வாழ்ந்து வருகிறார் என்றும், மனுதாரரின் மனு மற்றும் சாட்சியம் மூலம் கூறப்பட்டுள்ள நிலையில் எதிர்மனுதாரர் அறிவிப்பு பெற்றுக்கொண்டும் நீதிமன்றம் ஆஜராகி மனுதாரர் தாக்கல் செய்துள்ள மனுவை மறுத்து எவ்வித எதிர்கட்சியும் செய்யாததால் மனுதாரரின் வழக்கை ஏற்க வேண்டியுள்ளது.

**3)** மனுதாரரின் மனுவை மறுத்துரைக்கும் வகையில் எதிர்மனுதாரர் நீதிமன்றம் ஆஜராகி எதிருரை தாக்கல் செய்து வாய்மொழி

S INDRA GANDHI Digitally signed by S INDRA GANDHI
Date: 2026.07.01 17:00:28 +0530

மற்றும் ஆவண சாட்சியங்கள் முன்னிலைப்படுத்தவில்லை. மனுதாரரின் மனு தகுந்த சாட்சியங்கள் மற்றும் சான்றாவணங்களின் மூலம் நிரூபிக்கப்பட்டுள்ளது. மனுதாரரும், எதிர்மனுதாரரும் பிரிந்து வாழ்ந்து வரும் நிலையில் எதிர்மனுதாரரை மனுதாரருடன் சேர்ந்து வாழ உத்தரவிடுவது இருவரின் வாழ்க்கையிலும் நிம்மதியை ஏற்படுத்தாது என்று இந்நீதிமன்றம் கருதுவதால், மனுதாரர் தாக்கல் செய்துள்ள மனுவை அனுமதித்து, மனுதாரருக்கும், எதிர்மனுதாரருக்கும் கடந்த 11.02.2008 அன்று நடைபெற்ற திருமணத்தை ரத்து செய்து விவாகரத்து பரிகாரம் வழங்கி உத்தரவிடுகிறது.

VII. **முடிவாக,**

1. **மனுதாரர் தாக்கல் செய்துள்ள மனு செலவுத் தொகையுடன் அனுமதித்து உத்தரவிடப்படுகிறது.**
2. **மனுதாரருக்கும், எதிர்மனுதாரருக்கும் கடந்த 11.02.2008 அன்று நடைபெற்ற திருமண பந்தத்தை ரத்து செய்து விவாகரத்து பரிகாரம் வழங்கி உத்தரவிடப்படுகிறது.**

இவ்வுத்தரவு என்னால் சுருக்கெழுத்து - தட்டச்சரிடம் சொல்லப்பட்டு, பிழைநீக்கம் செய்து இன்று 01.07.2026 அவையறிய பகரப்பட்டது.

S INDRA GANDHI Digitally signed by S INDRA GANDHI Date: 2026.07.01 17:00:34 +0530

சார்பு நீதிபதி,

நாகப்பட்டினம்.

**மனுதாரர் தரப்பு சாட்சி**

ம.சா.1 திருமதி. நித்தியகலா (மனுதாரர்)

**<u>மனுதாரர் தரப்பு சான்றாவணங்கள்</u>**

| | | | |
|---|---|---|---|
| ம.சா.ஆ.1 | 11.02.2008 | மனுதாரருக்கும், எதிர்மனுதாரருக்கும் நடைபெற்ற திருமணத்திற்கான திருமண அழைப்பிதழ் | (அசல்) |
| ம.சா.ஆ.2 | -- | திருமண புகைப்படம் | (அசல்) |
| ம.சா.ஆ.3 | -- | மனுதாரரின் ஆதார் அட்டை | (நகல்) |
| ம.சா.ஆ.4 | -- | எதிர்மனுதாரரின் ஆதார் அட்டை | (நகல்) |
| ம.சா.ஆ.5 | -- | மனுதாரரின் குடும்ப அட்டை | (நகல்) |

**<u>எதிர்மனுதாரர் தரப்பு சாட்சி</u>** : இல்லை

**<u>எதிர்மனுதாரர் தரப்பு சான்றாவணம்</u>** : இல்லை

S INDRA GANDHI Digitally signed by S INDRA GANDHI Date: 2026.07.01 17:00:40 +0530

சார்பு நீதிபதி,

நாகப்பட்டினம்.

Draft / Fair **உத்தரவு**

சார்பு நீதிமன்றம், நாகப்பட்டினம்

**இந்து திருமண அசல் எண்.94/2025**

நாள் : 01.07.2026